பக்கங்கள் 17 + 04

மாலை முரசு
கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 29 செவ்வாய்க்கிழமை 12.03.2024 அதிர்வு 225

## தப்பியோட முற்பட்ட சந்தேகநபர் பொலிஸாரால் சுட்டுக்கொலை!

கம்பஹா, மல்வத்துஹிரிபிட்டிய விகாரையில் தேரர் ஒருவரைக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட துப்பாக்கிதாரி பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார். 04



### வெடுக்குநாறிமலை ஆலய பூசகர் உள்ளிட்ட

# 8 பேரின் விளக்கமறியல் 19 ஆம் திகதி வரை நீடிப்பு

### சந்தேகநபர்கள் சார்பில் சுமந்திரன் உள்ளிட்ட சட்டத்தரணிகள் பலர் ஆஜர்

(கே.வசந்தன்)

வவுனியா வடக்கு, வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிவான் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. 03

# ஒரே இரவில் 6 பேர் சுட்டுப் படுகொலை!

### தென்னிலங்கையில் பயங்கரம்

தென்னிலங்கையில் வெவ்வேறு இடங்களில் ஒரே இரவில் 6 பேர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

காலி மாவட்டத்தில் 4 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 2 பேரும் நேற்றிரவு இவ்வாறு சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

காலி, எல்பிட்டி – பிடிகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருவல பிரதேசத்தில் கடையொன்றுக்கு அருகில் நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 2 ஆண்கள் உயிரிழந்துள்ளனர். 03



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம் - Bonding Tamils Globally



# தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற பீடி இலைகள் சிக்கின!

(ந.லோகதயாளன்)

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்குக் கடத்த முயன்ற ஒரு கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகளைத் தமிழகப் பொலிஸார் இன்று கைப்பற்றியுள்ளனர்.

தூத்துக்குடி மாவட்டத்தின் திரேஸ்புரம் கடற்கரையில் அதிகாலை 3.30 மணியளவில் ரோந்துப் பணியில் பொலிஸார் ஈடுபட்டிருந்தபோதே இவற்றைக் கைப்பற்றியுள்ளனர்.

ஒவ்வொன்றும் 35 கிலோ எடை கொண்ட 40 பண்டல்களில் 1400 கிலோ பீடி இலைகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

பீடி இலைகளை ஏற்றி வந்த வாகனம், தமிழகப் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் வாகனத்தில் இருந்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பீடி இலை பண்டல்களைக் கடத்தும் நோக்கில் ஏற்றிய படகும் கைப்பற்றப்பட்டுள்ளது.





# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்





## 8 பேரின்....

**(முதலாம் பக்கத் தொடர்ச்சி)**

கடந்த 8 ஆம் திகதி மகா சிவராத்திரி தினத்தன்று வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் மகா சிவராத்திரி பூஜை வழிபாடுகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது ஆலயத்துக்குள் நுழைந்த பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் வழிபாட்டில் ஈடுபட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரைக் கைது செய்தனர்.

அவர்களைக் கடந்த 9 ஆம் திகதி சனிக்கிழமை வவுனியா நீதிவான் நீதி மன்றத்தில் முற்படுத்திய நிலையில் விசாரணைகள் நிறைவு பெறாத காரணத்தால் இன்று வரை அவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், இன்று மீண்டும் வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

காலை 9 மணி முதல் மூன்று தடவைகள் குறித்த வழக்கு விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில், தொல்பொருள் திணைக்களத்தினர் அங்குள்ள தொல்பொருள் சின்னங்களைச் சந்தேக நபர்கள் சேதப்படுத்தினர் என்று மன்றின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தனர்.

இதனையடுத்து மேற்படி சந்தேக நபர்கள் 8 பேரையும் எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஆலயப் பூசகர் உள்ளிட்ட 8 பேர் சார்பில் ஜனாபதிதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணிகளான என்.ஸ்ரீகாந்தா, க.சுகாஷ், தி.திருஅருள், கிறிஸ்ரினா, ஜிதர்சன், சஜித்தா, சாரு கேசி, விதுசினி, கீர்த்தனன், யூஜின் ஆனந்தராஜா, கொன்சியஸ் உள்ளிட்ட பலர் மன்றில் ஆஜராகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

## ஒரே இரவில்....

ஒருவர் சம்பவ இடத்திலும், மற்றைய நபர் வைத்தியசாலையிலும் சாவடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த ஆண் ஒருவரும், பெண் ஒருவரும் வைத்தியசாலையில் தொடர்ந்து சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தத் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தப் படுகொலைக்கு ரி – 56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, காலி, அம்பலாங்கொடை – கலகொட பிரதேசத்தில் கடையொன்று மீது நேற்றிரவு இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் 2 ஆண்கள் உயிரிழந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தத் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இந்தப் படுகொலைக்கும் ரி – 56 ரக துப்பாக்கி பயன்படுத்தப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த மூவர் பலபிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கம்பஹா, பியகம பிரதேசத்தில் நேற்றிரவு 28 வயதுடைய இளைஞன் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

வேலை முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருந்த மேற்படி நபர், வீட்டுக்கு அருகில் வைத்து கைத்துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

ஓட்டோவில் வந்த இருவரே இந்தத் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

இது இவ்வாறிருக்க, கம்பஹா, ஜா – எல பிரதேசத்தில் நேற்றிரவு 41 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மேற்படி நபர், வீட்டில் வைத்து கைத்துப்பாக்கியால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்தத் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

தென்னிலங்கையை உலுக்கிய இந்தப் படுகொலைச் சம்பவங்கள் பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் காரில் கடத்தப்பட்டு வெட்டிக்கொலை

(எஸ்.நிதர்ஷன்)

மனைவியுடன் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவரைக் கும்பல் ஒன்று கடத்திச் சென்று வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொண்டநிலையில் அந்தக் குடும்பஸ்தர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை – மாவடி பகுதியைச் சேர்ந்த தவச்செல்வம் பவித்திரன் (வயது 23) என்ற இளம் குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில் ,

மேற்படி குடும்பஸ்தரும் அவரது மனைவியும் காரைநகரில் இருந்து வட்டுக்கோட்டை – மாவடியில் உள்ள வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவேளை பொன்னாலை கடற்படை முகாமுக்கு அருகாமையில் இரண்டு கார்களில் ஆயுதங்களுடன் நின்ற சிலர் அவர்களை வழிமறித்தனர்.



ஒரு காரில் மனைவியையும் அடுத்த காரில் மேற்படி நபரையும் ஏற்றிக் கொண்டு அந்தக் குழு அங்கிருந்து சென்றது. பின்னர் மனைவியைச் சித்தங்கேணி சந்தியில் இறக்கி விட்டனர்.

அதன்பின்னர் மனைவி வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்வதற்குச் சென்றார். இந்நிலையில், அந்த நபரைக் கடத்திச் சென்றவர்கள் அவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் மேற்கொண்ட பின்னர் வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையில் உள்ள மாமரத்துக்குக் கீழே அவரைத் தூக்கி வீசிவிட்டுச் சென்றனர் .

வைத்தியசாலையில் இருந்த சுகாதாரப் பணியாளர்கள் இது தொடர்பில் வைத்தியருக்குத் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தினர். அவ்விடத்துக்கு வந்த வைத்தியர் அம்புலன்ஸ் மூலம் அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற வேளை சில நிமிடங்களில் அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொலையாளிகளைக் கைது செய்ய விசேட பொலிஸ் குழு விசாரணைகளை நடத்தி வருகின்றது.

முன்னதாக மேற்கொள்ளப்பட்ட வாள்வெட்டுத் தாக்குதலுக்குப் பழிவாங்கும் நோக்கில் மேற்படி வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.





# இளவாலை பிரதேச வைத்தியசாலைக்கான புதிய மாடிக்கட்டடம் ஆளுநரால் திறந்துவைப்பு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், இளவாலை பிரதேச வைத்தியசாலைக்கான புதிய மாடிக் கட்டட நோயாளர் விடுதி வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸால் நேற்று மாலை திறந்து வைக்கப் பட்டது.

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர், யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர்கள், அதிகாரிகள், நோயாளர் நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் எனப் பலரும் இந்நிகழ்வில் கலந்துக்கொண்டனர்.

நோயாளர் விடுதியைப் பார்வையிட்ட ஆளுநர், முதலாவது நோயாளரையும் விடுதியில் அனுமதித்தார்.

இதன்போது நிகழ்வின் பிரதம விருந்தினருக்கான உரையை ஆற்றிய ஆளுநர்,

“வடக்கு மாகாணத்தின் சுகாதாரத்துறையை கட்டியெழுப்புவதற்கான விசேட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப் பட்டுள்ளன. நோயாளர்களை அதிகரித்து சுகாதாரத்துறையை வீழ்ச்சியடைய செய்ய நான் ஒருபோதும் விரும்பவில்லை. தற்கால உணவுப் பழக்கவழக்கம் உள்ளிட்ட செயற்பாடுகளால் ஏற்படக் கூடிய நோய்களைத் தடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

கிராமிய, பிரதேச வைத்தியசாலைகளுக்குத் தேவையான மருத்துவ வசதிகளை மேம்படுத்த வேண்டிய தேவை வடக்கு மாகாணத்தில் காணப்படுகின்றது.

மேலும் இளவாலை கிராமத்துக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பும் எனக்கு உள்ளது. இந்த விடயங்களைக் கருத்தில்கொண்டு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பேன்.

இளவாலை கிராம அபிவிருத்திக்காகச் செயற்படும் வருத்தப்படாத வாலிபர் சங்கம் மற்றும் நோயாளர் நலன்புரிச் சங்க உறுப்பினர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.” – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**தப்பியோட....**

அத்தனகல்ல – யட்டவத்த பகுதியில் மறைத்துவைக்கப்பட்டிருந்த ஆயுதங்களைத் தேடுவதற்காகச் சென்றிருந்தபோது சந்தேகநபர் தப்பிச் செல்ல முற்பட்டபோது பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சந்தேகநபர் உயிரிழந்துள்ளார்.

கம்பஹா, மல்வத்துஹிரிபிட்டிய கஹடான ஸ்ரீ கனாராம விகாரையைச் சேர்ந்த தேரர் ஒருவர், கடந்த ஜனவரி 23ஆம் திகதி சுட்டுக்கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் துப்பாக்கிதாரி எனச் சந்தேகிக்கப்படும் மேற்படி நபர், மொனராகலை – ஹம்பேகமுவ பகுதியில் கைது செய்யப்பட்டிருந்தார்.

அரலகங்வில பகுதியைச் சேர்ந்த 32 வயதான சந்தேகநபர் அந்தப் பகுதியில் இருக்கின்றார் என்று ஹம்பேகமுவ பொலிஸ் நிலையத்தின் புலனாய்வு அதிகாரிகளுக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய அவர் கைது செய்யப்பட்டிருந்தார்.



# முல்லைத்தீவில் யானை தாக்கி ஒருவர் நேற்று உயிரிழந்தார்!

முல்லைத்தீவு - அம்பகாமம் பழைய கண்டிவீதி பகுதியில் யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று (11) இடம்பெற்றுள்ளது.

கரிப்பட்டமுறிப்பு அம்பகாமத்தினை சேர்ந்த 62 வயதுடைய முத்துத்தம்பி கிருஸ்ணசாமி என்பரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அந்த நபர் முல்லைத்தீவு அம்பகாமம் பழைய கண்டிவீதி பகுதியில் பகல் வேளை வீதியால் சென்று கொண்டிருந்த போதே யானை தாக்குதலுக்கு உள்ளா னார் என்று பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

சம்பவ இடத்துக்கு வருகை தந்த முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி எஸ்.ஏச். மஹ்ரூஸ் சடலத்தை முல்லைத் தீவு மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு சென்று பிரேத பரிசோத னைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க உத்தரவிட்டுள்ளார்.

கரிப்பட்டமுறிப்பு, அம்பகாமம், ஒலு மடு உள்ளிட்ட பகுதிகளில் பகல் வேளை களில் யானைகளின் தொல்லை அதிக ரித்து காணப்படுகிறது என்று மக்கள் தெரிவித்துள்ளார்கள்.

இதனால் விவசாயிகளும் பாடசாலை மாணவர்களும் வீதிகளில் செல்ல முடியாத நிலை காணப்படுகிறது என் றும் குறிப்பாக யானையின் தாக்கத்தால் தமது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டு வரு கிறது எனவும் மக்கள் கவலை தெரி வித்துள்ளனர்.




# ஒட்டுசுட்டான் - மாங்குளம் வீதியில் விபத்துக்குள்ளான பொலிஸ் வாகனம்

முல்லைத்தீவு - முள்ளியவளை பொலிஸ் நிலையத்துக்கு உரிய பொலிஸ் வாகனம் ஒன்று ஒட்டுசுட்டான் மாங்குளம் வீதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவமானது நேற்று (11) மாலை இடம்பெற்றுள்ளது.

முள்ளியவளையில் இருந்து மாங் குளம் நோக்கிச் சென்ற பொலிஸ் வாக னம் மீண்டும் மாங்குளத்தில் இருந்து ஒட்டுசுட்டான் நோக்கி பயணிக்கும் பொழுது தச்சடம்பன் பகுதியில் வேக கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகிப் புரண்டுள்ளது. இதன்போது வாகன சாரதி சிறுகா யங்களுக்கு ஆளா கினார். விபத்து தொடர்பாக மாங்குளம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தேர்தலைப் பிற்போடும் முயற்சி

தற்போதைய அரசமைப்பின் ஏற்பாடுகளின் படி வரும் செப்டம்பர் 17ஆம் திகதிக்கும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கும் இடைப்பட்ட ஒரு மாத காலத்துக்குள் ஒரு நாளில் அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

அதை ஒத்திவைப்பதற்கான ஏற்பாடுகள் ஏதும் சட்டத்திலோ, அரசமைப்பிலோ இல்லை. அந்தக் குறிப்பிட்ட காலத்தில் அதை நடத்தியேயாக வேண்டும்.

அதில் தலையீடு செய்யும் அதிகாரம் பதவியில் இருக்கும் ஜனாதிபதிக்கும் கிடையாது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் பற்றிய உத்தியோகபூர்வ அறிவிப்பை தேசிய தேர்தல் ஆணையம் வரும் ஜூலை 15ஆம் திகதி அளவில் வெளியிட வேண்டும். அதற்கு இன்னும் ஆக நான்கு மாதங்களே உள்ளன.

ஜனாதிபதித் தேர்தலை இப்படித் திட்டமிடப்பட்ட காலத்தில் நடத்தியேயாக வேண்டும் என்ற நிலைமை உள்ள போதிலும், அதைத் தள்ளிப் போடச் செய்வதற்கு விக்கிரமசிங்க - ராஜபக்ஷ அரசு இன்னமும் முழுமூச்சில் முயற்சித்துக் கொண்டிருப்பதாக எதிர்க்கட்சிகளின் பேச்சாளர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருக்கின்றார்.

ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையில் நியமிக்கப்பட்ட பத்துப் பேர் குழு இப்போது சமர்ப்பிக்கக் கூடிய - முன்வைக்கக் கூடிய - அனைத்துத் தேர்தல் சட்டங்கள் தொடர்பான ஒழுங்குமுறைகள் பற்றிய பரிந்துரைகளைக் காட்டி, இந்தத் தேர்தலை ஒத்திவைக்கும் நாடகத்தை அரங்கேற்றுவதற்கு அரசு முயலக்கூடாது எனவும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் கூறியிருக்கிறார்.

மேற்படி பிரியசாத் டெப் தலைமையிலான குழு தேர்தல் சட்டங்களைத் திருத்துவதற்கும், தேவையான பரிந்துரைகளை - சிபாரிசுகளை - செய்வதற்குமாக 2023 நவம்பர் முதல் வாரத்தில் நியமிக்கப்பட்டது.

தேர்தல் சட்டங்களை திருத்துவதற்கான தனது சிபாரிசுகளை இவ்வாண்டு மே மாதம் சமர்ப்பிக்கும்படி மேற்படி குழு கோரப்பட்டிருந்தது.

அந்தக் குழு தனது பரிந்துரைகளை இப்போதைய தேர்தல் காலத்தில் முன் வைத்தாலும், அவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்துவது என்ற காரணத்தைக் காட்டி, இப்போது நடைபெற வேண்டிய ஜனாதிபதித் தேர்தலைத் தள்ளிப் போட முயற்சி எடுக்கக் கூடாது என சுட்டிக்காட்டியுள்ள பேராசிரியர் ஜி.எல்.பீரீஸ், அந்த குழுவின் அறிக்கை தேர்தல்கள் நெருங்கும் சமயத்தில் வரக்கூடும் என்பதால், ஜனாதிபதி தேர்தல் மற்றும் அதற்கு முன்னரோ அல்லது பின்னரோ நடைபெறக்கூடிய பொது தேர்தல் போன்றவை எல்லாம் முடிந்த பின்னர், புதிய ஜனாதிபதியின் கீழ், புதிய அரசினால் அதைக் கையாள முடியும் என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ராஜபக்ஷக்களுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையில் அண்மையில் நடந்த சந்திப்புகள் மற்றும் கலந்துரையாடலில் எந்தத் தேர்தலை முதலில் நடத்துவது - ஜனாதிபதித் தேர்தலையா அல்லது பொதுத் தேர்தலையா என்பது தொடர்பில் - இணக்கமான முடிவு எதுவும் எட்டப்படவில்லை என்று பேராசிரியர் ஜி.எல்.பீரீஸ் சுட்டிக்காட்டினார். அத்தகைய இணக்கம் இல்லாத காரணத்தினால் ஏதேனும் குழப்பமான சட்ட விதிகள் -. முடிவுகளை - காட்டி ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் ஒத்திப் போடும் முயற்சி எடுக்கப்படலாம் என்றும் அவர் எச்சரித்து இருக்கின்றார்.


தேசிய ரீதியில் கடந்த ஆண்டு முற்பகுதியில் நடத்தப்பட்டிருக்க வேண்டிய உள்ளூராட்சி தேர்தலை நிதி நெருக்கடிகளைக் காரணம் காட்டி ராஜபக்ஷ - விக்கிரமசிங்க அரசு நிரந்தரமாகத் தள்ளிப் போட்டிருப்பதைச் சுட்டிக்காட்டியுள்ள பேராசிரியர் பீரிஸ் அதுபோன்ற நெருக்கடிகளைக் காட்டி ஜனாதிபதித் தேர்தலையும் தள்ளிப் போட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முயலக்கூடும் என்றும் மீண்டும் எச்சரித்திருக்கிறார்.


இவ்வாண்டில் நடைபெற வேண்டிய ஜனாதிபதி தேர்தலுக்காக ஆயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக நிதியமைச்சர் என்ற முறையில் கடந்த வருடம் வரவு - செலவு திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார்.

இப்போது முற்கூட்டியே பொதுத் தேர்தலுக்கான அறிவிப்பை விடுத்து, ஒதுக்கப்பட்ட நிதியை பொதுத்தேர்தலுக்கு செலவிட வைத்துக் கொண்டு, மேலதிகமாக ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு நிதி இல்லை என்று காட்டி, அதை நடத்தாமலும் அப்பதவியில் தான் தொடரவும் கூட ஜனாதிபதி ரணில் விக்க்கிரமசிங்கம் முயலலாம் என எச்சரிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் மேசையை தனக்குச் சாதகமாக திருப்பி போட முடியாய இக்கட்டில் இருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதன் காரணமாக தேர்தலை நடத்தாமல் செய்வதற்கு சாம, பேத, தான, தண்டம் என்று நான்கு வழிகளிலும் ஏழக்கூடும் எனவும் எச்சரிக்கப்படுகின்றது.







# தென் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பதவிக்கு ஏழுபேர் போட்டி









(எம். எப். றிபாஸ்)

தென் கிழக்குப் பல்கலைக்கழக தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் முதலாவது மூன்றாண்டு பதவிக் காலம் எதிர்வரும் 2024.08.08 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது.

இந்த நிலையில் அந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்று நிருபத்துக்கு அமையப் பல்கலைக்கழகப் பேரவையின சார்பில் பதில் பதிவாளர் எம்.ஐ. நௌபர் விண்ணப்பங்களைக் கடந்த பெப்ரவரி 08 ஆம் திகதி கோரியிருந்தார்.

அதன் அடிப்படையில் தற்போதைய உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர், பேராசிரியர் எப். ஹன்ஸியா றவூப், பேராசிரியர் ஏ.எம். றஸ்மி, பேராசிரியர் எஸ்.எம். ஜுனைடீன், பேராசிரியர் எம்.வி.எம். இஸ்மாயில், பேராசிரியர் ஏ.எம். முஸாதிக் மற்றும் கலாநிதி ஏ.சி.எம். ஹனஸ் உள்ளிட்ட ஏழுபேர் விண்ணப்பித்துள்ளனர்.

புதிய உபவேந்தர், பல்கலைக்கழக பேரவையின் விஷேட ஒன்றுகூடல் ஒன்றின் ஊடாகப் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 03 - 2023 ஆம் இலக்க சுற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ளதன் அடிப்படையில் பேரவை உறுப்பினர்கள், விண்ணப்பதாரிகளுக்கு ஏழு அளவுகோல்களின் கீழ் புள்ளிகள் இட்டு, பெற்ற அதி கூடிய புள்ளிகள் அடிப்படையில் மூவரை தெரிவு செய்வர். அந்த மூவரில் ஒருவரை ஜனாதிபதி உபவேந்தராக நியமிப்பார்.

தென்கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பதவிக்கு இந்த முறை தென்கிழக்கு பல்கலைக்கழகக் கல்விசார், சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளனர்.

கடந்த 2021.08. 08 ஆம் திகதியன்று பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் 5 ஆவது உபவேந்தராக நியமிக்கப்பட்டிருந்தார். தற்போது விண்ணப்பித்துள்ள ஏழு விண்ணப்பதாரிகளில் ஒருவர் ஆறாவது உபவேந்தராக நியமிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தரம் குறைந்த புற்று நோய் மருந்து இறக்குமதியால் நான்கு பில்லியன் ரூபா மோசடி இடம்பெற்றுள்ளது!

தரம் குறைந்த புற்று நோய் மருந்து இறக்குமதியின் மூலம் சுமார் நான்கு பில்லியன் ரூபா மோசடி செய்யப்பட்டுள்ளது என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

மார்பகப் புற்று நோய்க்காகப் பயன்படுத்தப்படும் மருந்து வகையே இவ்வாறு மோசடியாக கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மோசடி தொடர்பில் லஞ்ச ஊழல் மோசடி தவிர்ப்பு ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஊழல் மோசடிகளுக்கு எதிரான பிரஜைகள் சக்தி அமைப்பால் இந்த முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.




சுகாதார அமைச்சு மற்றும் தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் வழமையான நடைமுறைகளுக்குப் புறம்பான வகையில் மருந்துப் பொருள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மார்பகப் புற்று நோய்க்காகப் பயன்படுத்தப்படும் மருந்து வகைக்கு நிகரான எனினும் தரம் குறைந்த மருந்து வகை இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியில் இந்த மோசடி இடம்பெற்றுள்ளது.

அப்போதைய சுகாதார அமைச்சர் வைத்தியர் ராஜித சேனாரட்ன, அப்போதைய சுகாதார அமைச்சின் செயலாளர் அனுர ஜயவிக்ரம, தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அப்போதைய தலைவர் லால் ஜயகொடி உள்ளிட்ட சிலருக்கு எதிராகவே இவ்வாறு குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

# சட்டவிரோத கடற்றொழிலில் ஈடுபட்டுள்ள இருவர் மணல்காடு கடற்பகுதியில் கைது!

வடமராட்சி, கிழக்கு மணல்காடு கடற்பகுதியில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் ஈடுபட்ட இருவர் பருத்தித்துறைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் கைது நடவடிக்கை நேற்று (11) இடம்பெற்றுள்ளது. இதன்போது குடத்தனை பகுதியைச் சேர்ந்த இருவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடற்பகுதியில் சட்டவிரோத நடவடிக்கைகளை தடுக்கும் முகமாக கடற்படையினர் தொடர் சுற்றிவளைப்புகளை மேற்கொண்டு வருகின்ற நிலையில் இதன் தொடர்ச்சியாக பருத்தித்துறை கடற்படையினர் வடமராட்சி கிழக்கு மணல் காடு கடற்பகுதியில் மேற் கொண்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக உடமைகளுடன் யாழ்ப்பாண கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்று கடற்படை மேலும் தெரிவித்துள்ளது.


# தமிழ், முஸ்லிம் கட்சிகளின் மக்கள் பிரதிநிதிகளை பலவீனப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுப்பு!

## முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளர் உதுமாலெப்பை தெரிவிப்பு

(கே. எ. ஹமீட் )

பல்லின மக்கள் வாழும் நமது நாட்டில் இன பேதங்களுக்கு அப்பால் எல்லா இன மக்களும் ஒற்றுமையாக வாழ்ந்து எல்லா இன மக்களின் உணர்வுகளுக்கும் மதிப்பளித்து செயல்பட வேண்டும்.

ஒரு புறம் தமிழ், முஸ்லிம் கட்சிகள் அரசுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கும் அதே வேளை, மறுபுறத்தில் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்களை தனித் தனியாக பிரித்தெடுத்து சிறுபான்மை கட்சிகளை பல வீனப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



இவ்வாறு சம்மாந்துறை மலையடி கிராமம் – 01 ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் கிளை புனரமைப்புக் கூட்டம் முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஐ.எம்.மன்சூர் தலைமையில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய முஸ்லிம் காங்கிரஸ் பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ். உதுமாலெப்பை இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

சிறுபான்மைக் கட்சிகளின் ஆதரவு அரசுக்குத் தேவைப்படும் போது கட்சிகளின் தலைமைகளிடமும், கட்சிகளிடமும் உத்தியோக பூர்வமான பேச்சுகளில் ஈடுபட வேண்டும்.

மறைந்த பெருந் தலைவர் எம்.எச். எம்.அஸ்ரப் ஒவ்வொரு தேர்தல்களிலும் மக்கள் மத்தியில் வந்து சமூக ஒற்றுமைக்காகவும், எமது அரசியல் உரிமைக்காகவும் கட்சி சொல்லும் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார். தலைவரின் கோரிக்கையை ஏற்று நாம் தேர்தல்களில் ஒற்றுமைப்பட்டு வாக்களித்தோம் தலைவருக்கும், கட்சிக்கும் விசுவாசமாக நாம் செயற்பட்டதால் நமது சமூக அரசியல் உரிமைகளை பெறுவதற்கு பலமாக அமைந்தன.

கட்சிக் கட்டுக் கோப்பையும், கட்சியையும் மீறிய கடந்த கால செயற்பாடுகளுக்கு கட்சி புனரமைப்பு வேலைத் திட்டம் நிறைவு செய்யப்பட்ட பின் முற்றிப்புள்ளி வைக்கப்படும்.

கட்சியையும் கட்சிக் கட்டமைப்பையும் சீர்குலைத்துவிட்டு, பதவிகள் பெறுவதற்காக மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளுக்கு எதிராகக் கட்சி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

கட்சிக்கும், தலைமைக்கும் , வாக்களித்த மக்களுக்கும் விசுவாசமில்லாத செயற்பாடுகளால் நமது மக்கள் நமது கட்சி மீது வைத்திருந்த நம்பிக்கையில் பாரிய பாதிப்பு ஏற்படக் கூடிய நிலைமை உருவாகி வருகின்றது. என்பதனை நாம் எல்லோரும் புரிந்து கொள்ள வேண்டும்.

கட்சியையும், தலைமையும், மக்களையும் நேசிக்க வேண்டும் கட்சியின் ஒற்றுமையை ஏற்படுத்தி விட்டு தேர்தல் நடைபெறும் காலங்களில் யார், யார் உயிருடன் இருக்க வாய்ப்பு இருக்குமோ அவர்கள் நாடாளுமன்றம், மாகாண சபை, உள்ளூராட்சி சபைகளுக்கு உறுப்பினர்களாக போகட்டும். ஆனால் இனிமேல் கட்சியையும் மக்களையும் பாவித்து பதவிகளையும் பெற்று விட்டுக் கட்சியைப் பலவீனப்படுத்தும் செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.–என்றார்.

இந்த நிகழ்வில் அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன், சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம்.எம்.செளபீர், மத்திய குழுவின் செயலாளர் ஏ.ஜே.எம். அஸாறுடீன், சம்மாந்துறை பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.நளீம், சம்மாந்துறை பிரதேச சபை சுயேற்சை குழு வேட்பாளர் எஸ்.றியால், சம்மாந்துறை தைக்கா பள்ளி வட்டார வேட்பாளர் அர்ஸாத் இஸ்மாயில், முன்னாள் அட்டாளைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் ஐ.எல்.நசீர் உட்பட கட்சியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

# 14 வருடங்கள் தலைமறைவாகி இருந்த பிடிவிறாந்துக் குற்றவாளி கைதானார்!

மட்டக்களப்பில் உயர் நீதிமன்றில் 7 வருட சிறைத் தண்டனை வழங்கி தீர்ப்பளித்து திறந்த பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட குற்றவாளி 14 வருடங்களாக தலைமறைவாகி இருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த நபர் மதம் மாறி பெயரை மாற்றிப் பொலன்னறுவையில் வசித்து வந்த நிலையிலே நேற்று (11) கைது செய்யப்பட்டுள்ளார் என்று மட்டக்களப்புத் தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர் இரு சிறுவர்களைச் சித்திரவதை செய்த குற்றச்சாட்டில் கைதாகி நீதிமன்ற பிணையில் வெளிவந்து நீதிமன்றில் முன்னிலையாகாமல் இருந்த நிலையில் உயர் நீதிமன்றில் 7 வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டது.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவிலுள்ள திருப்பெருந்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய இந்த நபர் நாவற்கேணி பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பெண் பிள்ளைகளின் தாய் ஒருவரை திருமணம் முடித்த நிலையில், மனைவியின் இரு பிள்ளைகளையும் அடித்துச் சித்திரவரை செய்த குற்றச்சாட்டில் 2009ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டுப் பிணையில் வெளிவந்திருந்தார்.

இந்த நிலையில் 14 வருடங்களாக தலைமறைவாகி இருந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

குற்றவாளி பாதிக்கப்பட்ட சிறுமிகள் உட்பட குடும்பத்துடன் முஸ்லிம் மதத்துக்கு மாறி அங்கு ஹுசையன் என்று பெயரை மாற்றிப் பொலன்னறுவையில் வசித்து வந்துள்ள நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் முன்னிலைபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# திருமலை கோணேஸ்வரா இந்துவின் மாணவர்களுக்குக் கௌரவிப்பு நிகழ்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

திருகோணமலை ஆர்.கே.எம். ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் 2023 தரம் 5 புலமை பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வு கல்லூரி அதிபர் வீ.ராஜேந்திரன் தலைமையில் ஆரம்பப் பிரிவு மண்டபத்தில் இடம் பெற்றது.

இந் நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகத் தேசிய கல்வி நிறுவக முன்னாள் விரிவுரையாளர் ஏ.செல்வேந்திரனும், கௌரவ விருந்தினராக திருகோணமலை வலயக் கல்வி அலுவலக திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.மோகனேந்திரனும், சிறப்பு விருந்தினர்களாக சோலா எஞ்ஜினியரிங் நிர்வாக இயக்குனரும் பொறியியலாளருமான என்.முகுந்தன், ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் பிரதி அதிபரான திருமதி ரீ.ஹரிகரன், திருகோணமலை வலய உதவிக் கல்விப் பணிப்பாளரான திருமதி வீ.சபேசன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதேதினத்தில் கோணேஸ்வரா இந்துக் கல்லூரியின் புதிய அதிபராக கடமையைப் பொறுப்பேற்ற பரமேஸ்வரனும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.






# தம்பலகாமம் பிரதேச செயலக மகளிர் தின நிகழ்வுகள்

(ஏ.எச் ஹஸ்பர்)


சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு தம்பலகாமம் பிரதேச செயலகம் ஏற்பாடு செய்த மகளிர் தின நிகழ்வு நேற்று முன்தினம் (11) தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதி தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெற்றது. 'அவளுடைய பலம் நாட்டுக்கு முன்னேற்றம்' எனும் தொனிப் பொருளில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது.

இதில் பெண் தொழில் சுயமுயற்சியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். இதில் உள்ளூர் உற்பத்தியின் சந்தை மற்றும் பெண்களுக்கான நோய் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வும் இடம் பெற்றது. கலை, கலாசார நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன. இதில் உதவிப் பிரதேச செயலர் இரா.பிரசாந்தன், தம்பலகாமம் பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் மலர்விழி, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், இலங்கை வங்கி கிளை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.



# ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் வருடாந்த மாநாடு கொழும்பில்





(எம். எப். றிபாஸ்)

ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பின் வருடாந்த மாநாடு கொழும்பு தேசிய நூலகம் மற்றும் ஆவணச் சேவைகள் சபை கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கட்சியின் பிரதித் தலைவர் எம். பீ. அக்பர் அலி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் செயலாளர் நாயகம் எம். ரீ. ஹசன் அலி செயலாளர் அறிக்கையைச் சமர்ப்பித்து உரை நிகழ்த்தினார்.

கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், கட்சியின் பொருளாளருமான கலீலுர்ரஹ்மான் கணக்க றிக்கை பற்றி விளக்கமளித்தார்.

இதேவேளை, கட்சியின் புதிய உயர் பீட உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். தவிசாளராக பஷீர் சேகுதாவூத், சிரேஷ்ட பிரதித் தலைவராக ஐ. எம். என். மிப்லால், பிரதித் தலைவர்களாக எம். பீ. அக்பர் அலி, எஸ். நிஜாமுதீன், ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். செயலாளர் நாயகமாக எம்.ரீ.ஹாசன் அலியும் பொருளாளராக ஐ. ஏ. கலீலுர் ஹுமானும், தேசிய அமைப்பாளராக எம். பீ. எம். சதாத்தும் மொத்தமாக 27 பேர் கொண்ட உயர் பீட உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

கற்பிட்டி பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஹிஸாம், கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினர்களான காதர், முஸம்மில் மற்றும் துறைமுக தொழிற் சங்கங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஹரீப், பாயிஸ் ஆகியோர் கட்சியின் உயர் பீடத்தில் இணைத்துக் கொள்ளப்பட்டனர்.





# களுவாஞ்சிக்குடியில் நடைபெற்ற பாரம்பரிய சித்த வைத்திய முகாம்

(வி.ரி. சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தின் மகளிர் தினத்தை முன்னிட்டு நிகழ்வுகளின் வரிசையில் பாரம்பரிய மூலிகை சித்த வைத்திய முகாம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தால் மகளிர் தினத்தை முன்னிட்டு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னத்தின் வழிகாட்டுதலின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வுகளின் வரிசையில் நான்காவது நிகழ்வாக மகளிருக்கான “பாரம்பரிய மூலிகை சித்த வைத்திய முகாமானது” பிரதேச செயலக ஒன்றுகூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சோதிடரும், பாரம்பரிய சித்த வைத்தியருமான மூகணபதிப்பிள்ளை விஸ்வலிங்கம் கலந்து கொண்டு பாரம்பரிய மூலிகை மற்றும் சித்த வைத்தியம் தொடர்பான அறிவூட்டலையும், சித்த வைத்திய ஆலோசனையையும் வழங்கியிருந்தார்.

இரு கட்டங்களாக இடம்பெற்ற இந்த வைத்திய முகாமில் காலையில் இடம்




பெற்ற நிகழ்வில் அலுவலக உத்தியோகத்தர்களும், பிற்பகல் இடம்பெற்ற நிகழ்வில் சமுர்த்தி சமுதாய அடிப்படை சங்கங்களின் உறுப்பினர்களுமாக நூற்றுக்கு மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்திருந்தனர்.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் உட்பட பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி பயனாளிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த வைத்திய முகாம் மூலம் தாம் நல்ல ஆலோசனைகளை பெற்றுக் கொண்டனர் என்று பயனாளிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது .

# பட்டிருப்பு வலய உத்தியோகத்தருக்குப் பாராட்டு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

பட்டிருப்பு வலயக்கல்வி அலுவலகத்தில் பணியாற்றி இடமாற்றம் பெற்று செல்லும் உத்தியோகத்தர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் புதிதாக இடமாற்றம் பெற்று வலயக் கல்வி அலுவலகத்துக்கு வருகை தந்த உத்தியோகத்தர்களை வரவேற்கும் நிகழ்வும் பட்டிருப்பு வலயக் கல்வி அலுவலக வலயக் கல்வி பணிப்பாளர் சிவானந்தம் சிறிதரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.




# புனித ரமழானை முன்னிட்டு உலருணவு பொதிகள் வழங்கல்

(நூருல் ஹுதா உமர்)

புனித ரமழானை முன்னிட்டு கல்முனை அல்-பஹ்ரியா மகா வித்தியாலய 2003 ஆம் வருடம் சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய ரியல் சாம்பியன் 2003 அமைப்பினரால் மக்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.

வருடாந்தம் இந்த உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வறிய மக்களுக்கான உலருணவு பொதிகள் சுமார் 100 குடும்பங்களுக்கு இன்று வழங்கிவைக்கப்பட்டன.

# அனர்த்த முகாமைத்துவப் பயிற்சிகளை பெற்றுள்ள இளையோருக்குச் சான்றிதழ்





(எம்.ஏ.றமீஸ்)

அனர்த்த வேளைகளில் பொது மக்களை பாதுகாத்து இழப்புக்களை கட்டுப்படுத்தும் நோக்கில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் மூலம் இளைஞர்களுக்கு பயிற்சியளித்து அவர்களை மக்களோடு ஒன்றிணைக்கும் சமூக மட்ட வேலைத் திட்டத்தின் கீழ் பயிற்சியளிக்கப்பட்டவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் நேற்று (11) மாலை இடம்பெற்றது.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகம்மட் றியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வீ.ஜெகதீசன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பி.ரி.எம்.இர்பான், அட்டாளைச்சேனை அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனத்தின் தலைவர் ஏ.எல்.ஹனீஸ், உதவி பிரதேச செயலாளர் நஹீஜா முஸப்பிர், அட்டாளைச்சேனை தேசிய பாடசாலை அதிபர் ஏ.எல்.எம்.பாயிஸ் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இதன்போது அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, ஒலுவில் மற்றும் பாலமுனை ஆகிய பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்டு பயிற்சி வழங்கப்பட்ட சுமார் 50 இளைஞர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

இவர்களுக்கு நீச்சல், தீ அனர்த்தம், முதலுதவி மற்றும் அனர்த்த முகாமைத்துவம் போன்ற துறைகளில் உயிர்ப் பாதுகாப்பு பயிற்சி நெறிகள் ஊடாக ஒரு வருடம் மற்றும் மூன்று மாத கால பயிற்சிகள் வழங்கப்பட்டன.



# பூவரசந்தீவு வடசல் பால இறுதிக்கட்ட பணிகளைப் பார்வையிட்டார் தௌபீக்!

(எஸ். சினீஸ்கான்)

கிண்ணியா பூவரசந்தீவு வடசல் பால இறுதிக் கட்ட நிர்மாணப் பணிகளை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும் திருகோண மலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பின ருமான எம்.எஸ் தௌபீக், நேற்றுக் (11) களவிஜயம் மேற்கொண்டு பார் வையிட்டார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பி னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரி விக்கையில்,

வடசல் பாலமானது 2021 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் நாட்டில் ஏற்பட்ட பொருளாதாரப் பிரச் சினை காரணமாக இடை நிறுத்தப்பட் டிருந்தது.

மீண்டும் 2023 இல் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு பாலம் முடிவடையும் தருவாயில் நாட்டில் ஏற் பட்ட விலையேற்றம் காரணமாக முழுமையாக நிறைவுபடுத்த முடியாமல் போய்விட்டது.

மீண்டும் எனது முயற்சியால் மிகுதி வேலைகளுக்கான நிதியைப் பெற்று அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட் டுள்ளது. இன்னும் மூன்று கிழமைக்குள் வேலைகள் பூர்த்தியாகி மக்கள் பாலத் தின் ஊடாகப் பயணிக்க முடியுமானதாக இருக்கும்.– என்றார்.



# பாடுமீன் சதுரங்கக் கழக வெற்றியாளருக்குப் பரிசில்!

(பழுவூரான்)

பாடுமீன் சதுரங்கக் கழகம் தனது ஆறாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஐந்து பிரிவுகளுக்கு இடையில் நடத்திய சதுரங்கச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற வீர, வீராங்கனைகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு ஞாயிற்றுக் கிழமை (10) மாலை மட்டக்களப்பில் நடைபெற்றது.

பாடுமீன் சதுரங்கக் கழகச் செயலாளர் ஏ.சௌத்திரி தலைமையில் பாடுமீன் சதுரங்க கழக ஏற்பாட்டில் 8 சுற்றுப் போட்டிகளாக நடத்தப்பட்ட சதுரங்கச் சுற்றுப் போட்டியில் அகில இலங்கை ரீதியில் 250 பாடசாலை மாணவர்கள் மற்றும் செஸ் கழகத்தினர் பங்கேற்றனர்.

அகில இலங்கை ரீதியில் சதுரங்க போட்டியில் கலந்து கொண்ட பாடசாலை மாணவர்கள் மற்றும் வீரர்களுக்கு இதன் போது பணப் பரிசுடன், சான்றிதழ்களும் வெற்றிக் கிண்ணங்களும், பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்புப் பிராந் திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணன் கலந்து கொண்டார். நிகழ்வில் சிறப்பு அதிதிக



ளாக கிழக்கு மாகாண சிரேஷ்ட விளையாட்டுத்துறை உத்தி யோகத்தர் வே.ஈஸ்வரன், மட்டக்களப்பு கோட்டமுனை கனிஷ்ட வித்தியாலய அதிபர் அருமைதுரை, மெதடிஸ்த மத்திய கல்லூரி அதிபர் எஸ். பாஸ்கரன், பாடுமீன் சதுரங்கக் கழக ஆலோசகர் அழகுதுரை ஜெயகரன் மற்றும் பாடுமீன் சதுரங்க கழக உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# பா.ஜ.க. மத்திய தேர்தல் குழு கூட்டம் நிறைவு: 90 வேட்பாளர்கள் இறுதி, தமிழகத்தில் இழுபறி




பா.ஜ.க. மத்திய தேர்தல் குழுவின் 2 ஆவது ஆலோசனைக் கூட்டம் நேற்று நிறைவுபெற்றது. இதில் 7 மாநிலங்களில் போட்டியிடக் கூடிய 90 வேட்பாளர்கள் இறுதி செய்யப்பட்டுள்ளனர் என தகவல்கள் தெரிவிக்கின்றன. மேலும் இது தொடர்பான அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தில் பிரதமர் நரேந்திர மோடி, மத்திய அமைச்சர் அமித் ஷா, பா.ஜ.க. தேசியத் தலைவர் ஜெபி நட்டா, மத்திய அமைச்சர்கள் அனுராக் தாக்கூர், பிரஹலாத் ஜோஷி, நித்யானந்த் ராய், எம்.பி.க்கள் சுஷில் மோடி, சி.ஆர். பாட்டீல், தெலுங்கானா மாநில பா.ஜ.க. தலைவர் கிஷன் ரெட்டி, இமாச்சலப் பிரதேசத்தின் மூத்த தலைவர் ஜெய்ராம் தாக்கூர், கர்நாடகா முன்னாள் முதல்வர்கள் எடியூரப்பா, பசவராஜ் பொம்மை, கர்நாடக மாநில பா.ஜ.க. தலைவர் விஜேந்திரா எடியூரப்பா, மத்தியப் பிரதேச முதல்வர் மோகன் யாதவ், குஜராத் முதல்வர் பூபேந்திரா பாட்டீல் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, குஜராத், கர்நாடாகா, பிஹார், இமாச்சலப் பிரதேசம், தெலுங்கானா உள்ளிட்ட மாநிலங்களுக்கான வேட்பாளர்கள் இறுதி செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

பிஹார், தமிழ்நாடு, ஒடிசாவில் இன்னும் பா.ஜ.க. கூட்டணி இறுதியாகாத நிலையில் வேட்பாளர்கள் அறிவிப்பு இம்மாநிலங்களில் கொஞ்சம் தாமதமாகும் எனவும் தெரிகிறது. பிஹாரில் லோக் ஜன சக்திக் கட்சி, தமிழ்நாட்டில் அ.தி.மு.க, ஹரியாணாவில் ஜனநாயக் ஜனதா கட்சி, ஒடிசாவில் பிஜு ஜனதா தளம் ஆகிய கட்சிகளுடன் கூட்டணி பேச்சுவார்த்தை இழுபறியாக சென்று கொண்டிருக்கிறது.

முன்னதாக கடந்த மார்ச் 2 ஆம் திகதியன்று பா.ஜ.க. 195 வேட்பாளர்கள் கொண்ட மக்களவைத் தேர்தலுக்கான முதல் வேட்பாளர் பட்டியலை வெளியிட்டது. அதில் 34 பேர் மத்திய, மாநில அமைச்சர்கள். இருவர் முன்னாள் முதல்வர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 2019 மக்களவைத் தேர்தல் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி 303 இடங்களைக் கைப்பற்றியது. காங்கிரஸ் கட்சி 52 இடங்களில் மட்டுமே வென்றது. இந்நிலையில் இத்தேர்தலில் பா.ஜ.க. 400 இடங்களை குறிவைத்துள்ளது.

# குடியுரிமை திருத்தச் சட்டம் மதத்துக்கு எதிரானது அல்ல

## ஆளுநர் தமிழிசை கருத்து



“குடியுரிமை திருத்தச் சட்டம் நாட்டின் பாதுகாப்புக்காகத்தான். மதத்துக்கு எதிரானதல்ல. இதில் மாநில அரசுக்கு எந்தப் பங்கும் இல்லை. இது நாட்டின் திட்டம். மாநில அரசுகள் இதற்கு ஆதரவு தரவேண்டும்.”

– இவ்வாறு புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை தெரிவித்துள்ளார்.

புதுச்சேரிக்கான ரயில்வே திட்டங்களை காணொலியில் பிரதமர் மோடி தொடங்கி வைத்தார். அதன் பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்துப் பேசிய தமிழிசை,

“குடியுரிமை சட்டம் நாட்டுக்குத் தேவையான சட்டம். யாருடைய குடியுரிமையும் நீக்கப்படவில்லை. குடியுரிமை சேர்க்கப்படவுள்ளது. மதத்துக்கும், இதற்கும் சம்பந்தமில்லை. நாட்டின் பாதுகாப்புக்குதான் அமல்படுத்தப்படுகிறது. ஆனால், சிலரால் இச்சட்டம் தவறாக முன் நிறுத்தப்படுகிறது. இதை பின்பற்றவே மாட்டோம் என்று சில மாநிலத்தில் கூறுகின்றனர்.

இதில் மாநில அரசுக்கு பங்கு இல்லை. இது மத்திய அரசின் திட்டம். மதத்துக்கு எதிரானதல்ல. மதத்துக்கு எதிராக இருந்தால் பிரதமர், உள்துறை அமைச்சர் முயற்சி செய்வார்களா? இது நாட்டுக்காகதான். அனைவரையும் இணைத்துதான் பிரதமர் மோடி செல்கிறார். இவர்கள்தான் பிரிவினை பேசுகிறார்கள்.

ரயில்வே திட்டங்கள் மேம்பட்டால் இணைப்பு மேம்படும், கல்வி கற்க, வளர்ச்சி ஏற்படும். இணைப்பு ஏற்பட வளர்ச்சி உருவாகும் என்பதற்கு இது உதாரணம். காக்கிநாடா எக்ஸ்பிரஸ் புதுச்சேரி வருவதால் இனி ஆந்திரம் அருகேயுள்ள புதுச்சேரி பிராந்தியமான ஏனாம் போகலாம். இதுவரை ரயிலில் செல்ல வசதி இல்லை. தற்போது ஒரு நாள் நாங்கள் செல்ல உள்ளோம்” – என்றார்.

# அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியை பா.ஜ.கவுடன் இணைத்தார் சரத்குமார்







அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியை அதன் நிறுவனர் சரத்குமார் இன்று பா.ஜ.கவில் இணைத்தார்.

சென்னை தியாகராய நகரில் உள்ள பா.ஜ.க. தலைமை அலுவலகத்தில் தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை முன்னிலையில் சரத்குமார் தனது கட்சியினை பா.ஜ.கவுடன் இணைத்தார்.

மக்களவைத் தேர்தல் நெருங்கும் வேளையில் சரத்குமார் பா.ஜ.கவுடன் தனது கட்சியை இணைத்துள்ளமை அரசியல் களத்தில் பேசுபொருளாகி உள்ளது.

இணைப்புக்குப் பின்னர் பேசிய சரத்குமார்,

"பா.ஜ.கவில் இணைந்தது சமத்துவ மக்கள் கட்சியின் முடிவு அல்ல. மாறாக மக்கள் பணிக்கான தொடக்கம். நாங்கள் மக்கள் பணியில் தொடர்கிறோம். இது நாளைய எழுச்சிக்காக எடுக்கப்பட்ட முடிவு, நாட்டின் வளர்ச்சிக்காகவும், வருங்கால இளைஞர்களின் நலனுக்காகவும் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கட்சியின் நிர்வாகிகளுடன் கலந்தாலோசித்தே முடிவு எடுக்கப்பட்டுள்ளது. பிரதமர் மோடி காமராஜரைப் போல ஆட்சி செய்கிறார்." – என்றார்.

# சென்னை - மைசூர் ரயில் சேவையை தொடங்கி வைத்தார் பிரதமர் மோடி

குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடந்த நிகழ்ச்சியில் நாடு முழுவதும் இன்று 10 புதிய வந்தே பாரத் ரயில்களின் சேவையை பிரதமர் மோடி கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

இதில் சென்னை – மைசூர் வந்தே பாரத் ரயில் சேவையும் அடங்கும். மேலும், பல்வேறு ரயில்வே சேவைகள் மற்றும் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார்.

ரயில்வே உள்கட்டமைப்பு, தொடர்பு மற்றும் பெட்ரோகெமிக்கல் துறையை ஊக்கப்படுத்தும் வகையில், அகமதாபாத்தில் உள்ள டி.எப்.சியின் கட்டுப்பாட்டு மையத்தில் நடந்த விழாவில்





பிரதமர் மோடி, 1,06,000 கோடி ரூபா மதிப்பிலான ரயில்வே மற்றும் பெட்ரோகெமிக்கல் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், தொடங்கியும் வைத்தார்.

# உக்ரைன் மீது ரஷ்யா நடத்த இருந்த அணுகுண்டு தாக்குதல் தடுக்கப்பட்டது





உக்ரைன் மீது அணு ஆயுத தாக்குதல் நடத்த ரஷ்யா திட்டமிட்டிருந்ததாகவும், அதை பிரதமர் மோடி உட்பட உலகத் தலைவர்கள் தலையிட்டு தடுத்தனர் என்றும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகத்தில் உள்ள மூத்த அதிகாரிகள் 2 பேர் தனியார் செய்தி நிறுவனத்துக்கு தகவல் அளித்துள்ளனர்.

தொடர்ந்து உக்ரைன் - ரஷ்யா இடையில் போர் நடைபெற்று வருகிறது. இந்த நிலையில், உக்ரைன் மீது அணு ஆயுத தாக்குதல் நடத்த ரஷ்யா திட்டமிட்டிருந்ததாகவும், அதை பிரதமர் மோடி உட்பட உலகத் தலைவர்கள் தலையிட்டு தடுத்தனர் எனவும் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் நிர்வாகத்தில் உள்ள மூத்த அதிகாரிகள் 2 பேர் தனியார் செய்தி நிறுவனத்துக்கு தகவல் அளித்துள்ளனர்.

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்தவுடன் பிரதமர் நரேந்திர மோடி சமரச முயற்சிகள் மேற்கொண்டார். ரஷ்ய ஜனாதிபதி புடின், உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி ஆகியோரை தொடர்பு கொண்டு பேசினார். அத்துடன் பிரச்சினையை பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக் கொள்ள வலியுறுத்தினார். ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் புடினை சந்தித்த போது, “இது போருக்கான காலம் இல்லை” என்று பிரதமர் மோடி வலியுறுத்தினார்.

இதுகுறித்து தனியார் செய்தி நிறுவனத்திடம் அமெரிக்க அதிகாரிகள் கருத்து வெளியிடுகையில்,

“உக்ரைன் மீது ரஷ்யா அணு ஆயுத தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் எங்களுக்கு ஏற்பட்டது. அப்படி ரஷ்யா அணு ஆயுத தாக்குதலை நடத்தினால், கடந்த 1945 ஆம் ஆண்டு ஜப்பானின் ஹிரோஷிமா மற்றும் நாகசாகியில் அணுகுண்டுகள் வீசியதற்கு பிறகு நடக்கும் முதல் பேரழிவாகி விடும். அப்படி ரஷ்யா அணுகுண்டு தாக்குதல் நடத்தினால், அதை எப்படி தடுப்பது என்று ஜனாதிபதி பைடன் உட்பட உலக தலைவர்கள் பலர் ஆலோசனை நடத்தினர்.

அதன்பின்னர்தான் இந்த விடயத்தில் புடினிடம் நேரடியாக பேசி அணுகுண்டு தாக்குதலை தடுத்து நிறுத்த உதவி செய்ய வேண்டும் என்று பிரதமர் நரேந்திர மோடியிடம் பைடன் நிர்வாகம் கூறியது. சீனா உட்பட மற்ற நாட்டு தலைவர்களையும் தொடர்பு கொண்டு இந்த அச்சத்தை தெரிவித்தோம். அவர்கள் ரஷ்ய ஜனாதிபதி புடினுடன் பேசினர்.

அதேபோல் பிரதமர் மோடியும் புடினிடம் இதுதொடர்பாக பேசியுள்ளார். அவரது உதவியால் உக்ரைன் மீதான அணுகுண்டு தாக்குதல் தடுத்து நிறுத்தப்பட்டது.” - என்றனர்.

# இஸ்ரேலில் ஹெலிகொப்டர் விழுந்து விபத்துக்குள்ளானது



இஸ்ரேலில் ஹெலிகொப்டர் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தெற்கு இஸ்ரேலில் உள்ள நெவாடிம் விமான தளத்தில் ஹெலிகொப்டர் தரையில் மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவத்தில் UH-60 Black Hawk என்ற தாக்குதல் ஹெலிகொப்டரே சேதமடைந்துள்ளதாக இஸ்ரேல் படைத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த விபத்தில் மூன்று அதிகாரிகள் காயமடைந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தப்படும் என இஸ்ரேல் படையினர் தெரிவித்துள்ளனர்.



# ஹெய்டி பிரதமர் பதவி விலகினார்



ஹெய்டியின் பிரதமர் ஏரியல் ஹென்றி பதவியில் இருந்து விலகியுள்ளார் என கயானாவின் ஜனாதிபதியும், தற்போதைய கரீபியன் சமூகத்தின் தலைவருமான மொஹமட் இர்ஃபான் அலி தெரிவித்துள்ளார்.

அங்குள்ள நிலைமை தொடர்பில், ஆராய்வதற்காக அவசர உச்சி மாநாடு ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், 74 வயதான ஹென்றி தமது பதவியில் இருந்து விலகியுள்ளார் என குறிப்பிடப்படுகின்றது.

ஹெயிட்டி பிரதமர் ஏரியல் ஹென்றியை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி, தொடர்ந்தும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தநிலையில், கடந்த வாரம் விமான நிலையம், பொலிஸ் நிலையங்கள் மற்றும் சிறைச்சாலைகள் மீதான தாக்குதல் அதிகரித்திருந்தன.

இதனால் தமது அத்தியாவசிய மற்ற தூதரக ஊழியர்களை விமானம் மூலம் அமெரிக்காவும் வெளியேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நடுவானில் குழந்தை பிரசவம்:

# லண்டன் சென்ற விமானம் அவசரமாக தரையிறக்கம்





லண்டன் சென்ற விமானத்தில் பயணித்த கர்ப்பிணி பெண்ணொருவருக்கு திடீரென பிரசவ வலி ஏற்பட்டு குழந்தை பிறந்துள்ளது.

இந்த நிலையில் இருவருக்கும் முதலுதவி செய்ய வேண்டி இருந்ததால் விமானம் உடனடியாக அவசரமாக விமானம் தரையிறக்கப்பட்டதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஜார்டன் என்ற பகுதியில் இருந்து லண்டன் சென்ற விமானத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது விமானத்தில் பயணித்த கர்ப்பிணி பெண்ணொருவருக்கு திடீரென நடுவானில் பிரசவ வலி ஏற்பட்டது. இதனை அடுத்து விமானத்தில் இருந்த பயணி ஒருவர் மருத்துவர் என்பதால் அவருடைய உதவியுடன் அந்த பெண்ணுக்கு பிரசவம் பார்க்கப்பட்டது.

இந்த பிரசவத்திற்கு விமான பணி பெண்களும் உதவி செய்தனர் என கூறப்படுகிறது.

இந்த நிலையில் கர்ப்பிணி பெண்ணுக்கு சுகப்பிரசவமாக பெண் குழந்தை பிறந்த நிலையில் குழந்தை பிறந்ததும் இருவருக்கும் உடனடியாக முதல் உதவி செய்ய வேண்டும் என்பதால் அருகில் உள்ள விமான நிலையத்தில் தரையிறக்க மருத்துவர் கேட்டுக் கொண்டார்.

இதனை அடுத்து அருகில் உள்ள விமான நிலையத்தில் அனுமதி பெற்று உடனடியாக விமானம் இறக்கப்பட்டு, அந்த பெண்ணுக்கு முதலுதவி அளிக்க மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் தற்போது தாயும் சேயும் நலமாக இருகின்றார் எனவும் கூறப்படுகிறது.

நடுவானில் கர்ப்பிணி பெண்ணுக்கு பிரசவம் பார்த்த மருத்துவருக்கு பாராட்டுக்கள் குவிந்து வருகிறன.

பக்கங்கள் - 4

# கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 12/03/2024

## பனிச்சரிவில் சிக்கிய பெண் 20 நிமிடங்களின் பின் மீட்பு!

பிரிட்டிஷ் கொலம்பியா,மார்ச் 12

வென்கூவர் நகருக்கு அருகில் பனிச்சரிவில் சிக்கியிருந்த பெண் ஒருவர் 20 நிமிடங்களின் பின்னர் மீட்கப்பட்டுள்ளார். C2

# ஹமாஸ் தாக்குதல்களில் பாலியல் வன்முறையாம்!

## பாதிக்கப்பட்டவர்களுக்குக் கனடா ஒரு மில்லியன் டொலரை வழங்கும்

ஒன்ராரியோ, மார்ச் 12

கடந்த ஒக்டோபர் மாதம் ஹமாஸ் தாக்குதலால் பாலியல் வன்முறைக்கு உள்ளான இஸ்ரேலியர்களுக்கு ஒரு மில்லியன் டொலர்களை கனடா வழங்கவுள்ளது.

இந்த அறிவிப்பை வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி வெளியிட்டுள்ளார்.

இந்த வன்முறையின் போது இடம்பெற்ற அனைத்தையும் வெளியில் கொணர்வதற்கு பல வருடங்கள் எடுக்கலாம் என இஸ்ரேலியப் பெண்கள் சார்பில் பல்வேறு யூத நிறுவனங்களை ஒருங்கிணைப்பதற்கு உதவும் முன்னாள் அரசியல் உதவியாளர் கெல்லி எய்ஷ்கொவிட்ஷ் தெரிவித்துள்ளார். C2



# ரிச்மண்ட் ஹில்லில் மூன்று வீடுகள் ஒரே இரவில் தீயில் எரிந்து நாசம்!

ஒன்ராரியோ,மார்ச்12

ரிச்மண்ட் ஹில்லில் உள்ள மூன்று வீடுகளில் ஒரே இரவில் இடம்பெற்ற தீ விபத்தில் எவருக்கும் காயம் ஏற்படவில்லை என யோர்க் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டங்கன் சாலையில், பேவியூ மற்றும் 16 ஆவது அவென்யூ அருகே இந்த தீவிபத்து இடம்பெற்றுள்ளது.

வீடுகளுக்குள் இருந்த அனைவரும் பத்திரமாக வெளியே வர முடிந்ததாகவும், ஆனால் தீயினால் குடியிருப்புகள் எரிந்து நாசமாகிவிட்டன எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். C2





# சர்சைக்குரிய நினைவுத் தூபி மயானத்தில் இருந்து அகற்றல்

ஒன்ராரியோ, மார்ச் 12

ஒன்ராரியோ மயானத்தில் வைக்கப்பட்டிருந்த நாசிகள் தலைமையிலான உக்ரைன் இராணுவ வீரர்களின் பிரிவினை நினைவுகூரும் நினைவுத் தூபி அகற்றப்பட்டுள்ளது.

இரண்டாவது உலகப் போரில் போராடிய உக்ரைனியர்களை பெருமளவில் உள்ளடக்கிய நாசிகள் பிரிவான, முதலாவது உக்ரைன் பிரிவின் நினைவாக ஓக்வில் சென்ட். வொலொடிமர் உக்ரைனிய மயானத்தில் இந்த நினைவுத்தூபி வைக்கப்பட்டிருந்தது.

இந்த நினைவுத் தூபி தொடர்பில் பல காலமாகவே சர்ச்சை நிலவி வந்தது.

1988இல் இந்த நினைவுத்தூபியை நிறுவுவதற்கு நிதி திரட்டிய முதல் உக்ரேனியப் பிரிவின் வம்சாவளியினருடன் கலந்தாலோசித்த பிறகு, பழுது பார்ப்பதற்காக நினைவுத்தூபி அகற்றப்படுவதாக மயானத்தின் நிர்வாகம் உறுதிபடுத்தியுள்ளது.




நினைவுத் தூபி மீள வைக்கப்படுமா என்பது தொடர்பான கேள்விகளுக்கு மயானத்தை நிர்வகிப்பவர்களிடம் இருந்து பதிலளிக்கப்படவில்லை.

## ஹமாஸ் தாக்குதல்களில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், இந்த பணம் எப்போது, எங்கே, யாருக்கு வழங்கப்படும் என்கிற தகவல்களை கனேடிய அரசாங்கம் வெளியிடவில்லை.

மார்ச் 11ஆம் திகதி சமூக ஊடக தளத்தில் அமைச்சர் ஜொலி இதனைத் தெரிவித்தார்.

ஹமாஸால் முன்னெடுக்கப்பட்ட பாலியல் வன்முறையால் பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கே இந்த நிதி வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ரிச்மண்ட் ஹில்லில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளுக்கு ஏற்பட்ட சேதம் 12 மில்லியன் டொலருக்கும் அதிகமாக இருக்கும் என்று பொலிஸார் கணித்துள்ளனர்.

எனினும், தீயிற்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

## பனிச்சரிவில் சிக்கிய...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வடகிழக்கு வென்கூவர் நகரில், ஞாயிற்றுக்கிழமையன்று இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நண்பர் ஒருவருடன் பனிச்சறுக்கில் ஈடுபட்டிருந்த நபர், பனிச்சரிவில் சிக்கி இருவரும் புதைந்துள்ளனர்.

இதன்போது வெளியில் வந்த ஆண் நபர், 911 அவசர சேவைக்கு அழைத்து தனது தோழி பனியில் சிக்கியிருப்பதாக தெரிவித்துள்ளார்.

இதனையடுத்தே மீட்புப் படையினர் விரைந்து வந்து பனியில் சிக்கிய மற்றைய நபரை மீட்டுள்ளனர்.





# கனடாவின் நிலக்கரிச் சுரங்கங்களில் இருந்து அமெ. நீர்நிலைகளில் மாசு கலத்தல் பிரச்சினை

## இணக்கமாகத் தீர்வு காண்பதற்கு இணக்கம்

பிரிட்டிஷ் கொலம்பியா,மார்ச் 12

பிரிட்டிஷ் கொலம்பியாவின் நிலக்கரிச் சுரங்கங்களில் இருந்து அமெரிக்க நீர் நிலைகளில் மாசு கலத்தல் தொடர்பான நீண்ட காலச் சிக்கல் குறித்து முடிவு காண் பதற்கு அமெரிக்காவும், கனடாவும் இணக்கம் கண்டுள்ளன.

கனடாவுக்கான அமெரிக்கத் தூதுவர் டேவிட் கொஹென் மற்றும் கனேடியத் தூதுவர் கேர்ஸ்டன் ஹில்மன் ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள அறிக்கை யில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள் ளது.

ஒத்துழைப்பான, விஞ்ஞான மற்றும் பூர்வீக அறிவின் அடிப்படையில், செயற் திறன்சார் முன்னோக்கிய நகர்வுக்கு இரு நாடுகளும் அர்ப்பணிப்புடன் உள்ளன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளது.

மார்ச் 11ஆம் திகதி வெளியிடப்பட்ட இந்த அறிக்கையில், பிரிட்டிஷ் கொலம்பியா, மொன்டானா மற்றும் இதாகா மாநிலங்கள், இரு தரப்பில் இருந்தும் 6 பூர்வீகக் குடி குழுக்கள் என்பன உள்ளடங்கலாக இரு நாடுகளின் அரசாங்கங்களும் இடம் பெற்றுள்ளன.

# சுகாதாரப் பணியாளர்களிடம் இருந்து பொலிஸாருக்கு ஒத்துழைப்பு இல்லை

## பொதுப் பாதுகாப்பு தொடர்பில் குற்றச்சாட்டு



கியூபெக்,மார்ச்12

பொதுப் பாதுகாப்பு தொடர்பில் பொலிஸாருக்கும், மனநல கட்டமைப் புக்கும் இடையில் போதியளவு ஒத் துழைப்பு இல்லை என கியூபெக் மாகாண பொலிஸ் அதிகாரி தெரி வித்துள்ளார்.

பொதுப் பாதுகாப்பு நோக்கங்க ளுக்காக சுகாதாரப் பணியாளர் களிடம் இருந்து தகவல்களைப் பெற முயற்சிக்கும் போது, இரகசியத் தன் மையை காரணங் காட்டி, சுகாதாரப் பணியாளர்கள் அந்தத் தகவல்களை வழங்குவதில்லை என அவர் குறிப் பிட்டுள்ளார்.

மனநலம் தொடர்பான சிக்கல்களைக் கொண்ட நபர் ஒருவரால் 2023ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கத்தியால் குத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர் பில் சாட்சியமளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

குறித்த நபர் தொடர்பில் கவனமாக இருக்குமாறு பொலிஸ் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு சில மாதங்களில், சந் தேக நபரால் பொலிஸார் ஒருவர் கொல்லப்பட்டார் எனஅவர் கூறியுள்ளார்.



# வாடகை அடுக்குமாடிக் கட்டடத்தில் மத்திய நிதி அமைச்சரின் அனுபவம்!

பிரிட்டிஷ் கொலம்பியா, மார்ச் 12

பிரிட்டிஷ் கொலம்பியா பிரீமியர் டேவிட் எபியைச் சந்திப்பதற்கு முன்பு அண்மையில் நிர்மாணிக்கப்பட்ட விக்டோரியா டவுன்டவுன் வாடகை அடுக்கு மாடிக் கட்டடத்தில் தங்கியிருந்ததாக மத்திய நிதியமைச்சர் கிறிஸ்டியா ஃப்ரீலேண்ட் தெரிவித்துள்ளார்.

இங்கு தங்கியிருந்த போது கனடாவில் அதிக வீடுகளை விரைவாகக் கட்டுவதற்கான அவசியத்தை தாம் உணர்ந்து கொண்டார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

மத்திய அரசின் அடுக்குமாடி நிர்மாணக் கடன் திட்டத்தில் இருந்து 100 மில்லியன் டொலர் செலவில் கட்டப்பட்ட ஹட்சன் ஹவுஸ், 245 குடும்பங்களுக்கு வாடகை அடுக்கு மாடி குடியிருப்புகளை வழங்குகிறது, மேலும் ஆறு கட்டடங்களில் 950 வீடுகள் கொண்ட பெரிய தொகுதியின் ஒரு பகுதியாக இது உள்ளது.

அடுத்த மாதம் முன்வைக்கப்படவுள்ள மத்திய அரசின் வரவு – செலவுத் திட்டத்தில் முக்கிய அங்கமாக இருக்கும் என்று ஃப்ரீலேண்ட் குறிப்பிட்டுள்ளார்.

வீடமைப்பிற்காக மத்திய அரசு சமீபத்தில் 2 பில்லியன் டொலர் முதலீடு செய்வதாக அறிவித்தது.




# எட்மண்டனில் வாடகை 20 சதவீதம் உயர்ந்தது!

அல்பேர்ட்டா, மார்ச்12

எட்மண்டனில் வாடகை சுமார் 20 சதவீதம் உயர்ந்து ஒரு படுக்கையறை வீட்டிற்கு 1,312 டொலராக உள்ளது.

டொராண்டோ மற்றும் வான்கூவர் உட்பட நாடு முழுவதும் உள்ள பல நகரங்களில் வாடகை கடந்த ஆண்டு முதல் குறைந்துள்ளது.

அல்பேர்ட்டாவில் 20 சதவீதம் அதிகரிப்பு, கனடாவிலேயே அதிகளவானதாக இருக்கின்றது.

புகலிடக் கோரிக்கையாளர்கள் அதிகளவில் அல்பேர்ட்டாவை நோக்கி நகரர்ந்து வருகின்ற நிலையில், வாடகை அதிகரிப்புக்கு அதுவே காரணமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.